## சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
### வாராந்த பாடசாலை

Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

பாடம் :- குடியியல்

4ம் வாரம்

தரம் :- 07

தயாரித்தவர்:- E. நிரோஷனி (இ/ப/ இராசகலை தமிழ் வித்தியாலயம்)

**பாட இலக்கம் : 02**

**தலைப்பு : எமது சமூகம்**

**01. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1) தனது வாழ்வை சிறந்ததாகவம் மதிப்பிற்குரியதாகவும் மற்றிக்கொள்வதற்கு அவசியமானது

1. குடும்பம் 2. உரிமை 3. கடமை 4. செல்வம்

2) சிவில் உரிமையானது

1. வாக்களிக்கும் உரிமை 2. அரசாங்கத்தை விமர்சிக்கும் உரிமை

3. அரசியல் பதவி வகித்தல் 4. சமத்துவம்

3) பிரசை ஒருவர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய நற்பண்புகளில் ஒன்றல்லாதது

1. நேர்மை 2. எளிமை 3. சுயநலம் 4. கருணை

4) உரிமைகளை சட்ட வரம்பிற்குள் அனுபவிப்பதன் மூலம் ஏற்படும் நன்மையல்லாதது

1. சுதந்திரம் பாதுகாக்கப்படும் 2. தரமான வாழ்க்கை வசதி ஏற்படல்

3. சிறந்த ஆளிடைத் தொடர்பு விருத்தி 4. சமூக சீரழிவு ஏற்படல்

5) அரசியல் உரிமையானது

1. கல்விக் கற்றல் 2. வாக்களித்தல்

3. சமத்துவம் பேணுதல் 4. விரும்பும் இடத்தில் வாழுதல்

**02. பின்வருவனவற்றிற்கு சரி, பிழை இடுக.**

1) பிரஜைகள் தத்தமக்குரிய பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குள்ள கடப்பாடே கடமையாகும். ( )

2) உரிமை எனப்படுவது சமூகத்தில் தனி மனிதனுக்கு கிடைக்கும் வரப்பிரசாதமாகும். ( )

3) பிற சமயத்தவர்களுக்கு இடையூறு செய்வதற்கான உரிமையுண்டு. ( )

4) கல்வி கற்றல் மாணவரது அடிப்படை உரிமையாகும். ( )

5) சமூக நலனை நோக்காகக் கொண்டே உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. ( )

**03. தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1) விழுமியங்களை பின்பற்றுதல் | அரசியல் உரிமை |
| 2) வாழும் உரிமை | கடமை |
| 3) அரசாங்கத்துக்குக் கட்டுப்படுதல் | நற்பண்புகள் |
| 4) வாக்களிக்கும் உரிமை | சுயநலமற்றது |
| 5) உரிமைகளின் இயல்பு | சிவில் உரிமை |

**04. கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1) உரிமை என்றால் என்ன?

2) கடமை என்றால் என்ன?

3) உரிமைகளின் இயல்புகள் மூன்றினைக் குறிப்பிடுக.

4) சிவில் உரிமைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

5) அரசியல் உரிமைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

6) உரிமைகளுடன் இணைந்த கடமைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

7) உரிமைகளை சட்ட வரம்பிற்குள் அனுபவிக்கத்தவறும் போது எதிர்நோக்கக்கூடிய சவால்கள் இரண்டினை எழுதுக.

8) மனிதன் மேன்மை மிக்க வளமாக வளர்ச்சிகாண அவசியமான காரணி எது?

9) நற்பிரசை ஒருவர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய உயர்பண்புகள் ஐந்தினைக் குறிப்பிடுக.

10) சமூக உறுப்பினர்கள் நற்பண்புகளை கொண்டிருக்கும் போது சமூகத்திற்கு கிடைக்கும் நன்மைகள் எவை?